## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்

**OS.No:** 61/2021 நாள்: 18.06.2026

வாசா.1, திரு. முத்திஸ்வரன்

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது**

சர்வே எண் 940 ல் உள்ள நிலம் 08.01.1930 ஆம் தேதிய கைிரைய பத்திரப்படி 2 ஆம் பிரதிவாதியின் தாத்தா நல்ல தம்பி தேவருக்கு தனித்து பாத்தியப்பட்டாதல் சர்வே எண். 963 ல் நல்லதம்பி தேவருக்கு 60 செண்ட் நிலம் பிரிவினையின் போது ஒதுக்கபட்டது என்று சொன்னால் 08.01.1930 ஆம் தேதிய கிரைய பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 963 ல் 1 ஏக்கர் 82 செண்ட் எங்களுக்கு கிரையமாக பாத்தியம். நல்லதம்பி தேவருக்கு 60 செண்ட் நிலம் ஒதுக்கபடவில்லை. சர்வே எண். 963 ல் 60 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றும், அவ்வாறு நான் ஒதுக்கபடவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 940 ல் உள்ள சொத்தை நல்லதம்பி தேவரும் கிரையம் கொடுத்ததை யாரும் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா. ஆ. 3 முதல் வா. சா. ஆ. 11 வரையான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் சட்டபடி செல்லாது என்றும் 1 முதல் 3 எதிர்வாதிகளை கட்டுபடுத்தாது என்று சொன்னால் சரியல்ல. பிராது தபசில் சொத்தானது ஒருபோதும் எங்களது அனுபவத்தில் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்தானது எங்களது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கான எந்தவித ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் நகல் ஆவணங்கள் உள்ளது. எனவே சொத்தானதை உலகம்மாள் என்பவர் அனுபவித்து வந்தார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகள் தபசில் சொத்துக்கானது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. என் பாட்டி உலகம்மாள் பெற்றதாக கூறும் கிரைய ஆவணங்கள் செல்லாத போது 08.07.1967 ஆம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லகூடியது அல்ல என்றும் ஊர்ஜுயத்திற்கு வரவில்லை என்று சரியல்ல. மேற்படி ஆவணத்தின் பேரில் நாங்கள் எந்தவிதமான உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 3 ஆம் எதிர்வாதியானவர் 04.04.2013 ஆம் தேதியிட்ட கிரைய வாங்கிய கிரைய ஆவணம் சட்ட படி செல்லதக்கது என்றும் எங்களை கட்டுபடுத்தக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. இதே தாவா சொத்தை பொறுத்து நான் விருதுநகர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 109/2013 என்ற வழக்கை இந்த எதிர்வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துஇருந்தேன் என்று சொன்னால் அது சரிதான். அந்த வழக்கில் பிராது சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் அமைத்துள்ள குடிசை மற்றும் பிளாட் கற்களை அகற்ற நீதிமன்ற மூலம் அகற்றி கொள்ள ஒரு செயல் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கபடிக்கும் பரிகாரமாக கேட்டுருந்தேன் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தானாக தன் தகப்பனார் பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் எதிர்வாதிகளே கற்களை பிடுங்கி போட்டார் என்று சாட்சியம் அளிக்கிறார். நான் சொல்வது தவறு என்றும் இன்றும் அந்த இடத்தில் பிளாட்டு கற்கள் உள்ளது என்றும்

எதிர்வாதிகள் அதை அப்புறபடுத்தவில்லை என்றும் 3 ஆம் பிரதிவாதியின் அனுபவத்தில் 51 செண்ட் உள்ளது என்றும், 1 ,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் 9 செண்ட் உள்ளது என்று சொன்னால் அது தவறு. தவறான புகாரின் பெயரில் பதியப்பட்ட முதல் தகவல்அறிக்கானது காவல் துறையினார் விசாரித்து புகாரில் உண்மை இல்லை என்று சொல்லி முதல் தகவல் அறிக்கையை மேல் நடவடிக்கை எடுக்கமாமல் முடித்து கொண்டார்கள் என்று சொன்னால் உண்மைக்கு புறம்மாக முதல் தகவல் அறிக்கையை காவல் துறையினார் முடித்து விட்டதை ஆட்சேபித்து நான் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2 திருவில்லிபுத்துார் ஒரு தனி பிராதை தாக்கல் செய்துள்ளேன். அந்த தனி பிராதின் நகலை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் விருதுநகர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்ததில் தாக்கல் செய்துருந்த 109/2013 என்ற வழக்கை வாபஸ் பெற்ற பின்பு தான் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் இந்த வழக்கை தாக்கல் செய்துகொள்ள மனு தாக்கல் செய்து அனுமதிக்க பட்ட பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். அந்த வழக்கை நான் நடத்தினால் எங்களுக்கு விரோதம் ஆகிவிடும் என்பதால் நான் மேல்நடத்தவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 13 ஆன இடைமனு எண். 1/2021 யின் OS 109/2013 யில் 10.03.2021 பிறந்த தீர்ப்பாணையில் சான்றிட்ட நகலில் சொத்துவிபரம் இல்லை என்று சொல்லபட்டதாக உள்ளது என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்ததில் நாங்கள் தாக்கல் செய்துருந்த இடைமனு எண். 2/2021 மனுவில் எங்களுக்கு ஆதாரவாக பிறந்த உத்தரவு மற்றும் உத்தராவணையை ஆட்சேபித்து இந்த வழக்கில் உள்ள எதிர்வாதிகள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனுவை தாக்கல் செய்துள்ளளார் என்று சொன்னால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யபடவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 4, 5 எதிர்வாதிகள் தரப்பில். கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஆஜாரில்லை 4,5 எதிர்வாதிகளை அழைத்தும் ஆஜாரில்லை 4, 5 எதிர்வாதிகள் தரப்பில் வா.சா. 1 யை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை)**

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 18th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.